மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, ஆரம்ப நாளிலிருந்து சொன்னதையெல்லாம் எங்களுக்குச் சேர்த்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அப்படி வருமேயானால் அது பிறகு தங்கள் பெயராலே ஒரு புத்தகமாக "திருக்குறள் உரை" என்கின்ற அளவில் வெளிவருவதற்கும் வசதியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியானால் என்னுடைய சொந்த உரையைத்தான் ஒவ்வொரு முறையும் தரவேண்டியிருக்கும்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. குமரி அனந்தன்: சபாநாயகர் அவர்களே, நான் ஒரு உரிமைப் பிரச்சினையைத் தங்களிடம் கொடுத்திருந்தேன். அதைபற்றித் தங்களுடைய கருத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த உரிமைப் பிரச்சினையில் தொடர்புடையவர் இந்த அவையினுடைய ஓர் உறுப்பினர் என்ற முறையில் அவரிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. அந்த விளக்கம் பெறப்பட்டதும் அது அவையில் எடுத்துக்கொள்ளப்படும்.

2. கவன ஈர்ப்பு.

கன்னியாகுமரி மாவட்டத்தின் சில பகுதிகளிலுள்ள உணவுப் பங்கீட்டுக் கடைகளில் புழுங்கல் அரிசி கிடைக்காததும் சென்னையில் சில பகுதிகளிலுள்ள மக்களுக்கு உணவுப் பங்கீட்டு அட்டை கிடைக்காததும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மா. சுந்தரதாஸ், செ. நூர்முகமது, அ. இரகுமான்கான் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

1989 பிப்ரவரி 17]

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில், குறிப்பாக விளவங்கோடு, கல்குளம் வட்டங்களில் உணவுப் பங்கீட்டுக் கடைகளில் பொதுமக்களுக்கு புழுங்கல் அரிசி கிடைக்காமலும் மற்றும் விளவங்கோடு, கல்குளம், சென்னை பூங்கா நகர் போன்ற பகுதி மக்களுக்கு சரிவர உணவுப் பங்கீட்டு அட்டை வழங்கப்படாமலும் இருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

மைய அரசு தொகுப்பிலிருந்து பெறப்படும் அரிசி பெரும்பாலும் பச்சரிசியாகவே இருப்பதால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கையிருப்பில் இருக்கும் புழுங்கல் அரிசியின் அளவு பச்சரிசியின் அளவை விட குறைவாகவே உள்ளது. அரசு முடிந்த அளவில் பச்சரியும் புழுங்கல் அரிசியும் 50 : 50 என்ற விகிதத்திலேயே பொதுவிநியோக முறையில் வழங்குமாறு அறிவுறுத்தியுள்ளது. இருப்பினும், புழுங்கல் அரிசியின் கையிருப்பு மிகவும் குறைவாகவே உள்ளது. எனவே இந்த விகிதாச்சாரப்படி வழங்குவது என்பது கடினமாக உள்ளது. எனினும், கன்னியாகுமரி மாவட்ட மக்களின் புழுங்கலரிசி தேவையினை முன்னிட்டு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் இந்த மாவட்டத்தில் தேவையான அளவு புழுங்கலரிசி இருப்பு வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

1—10—1988 குறுவை பட்டத்தில், எதிர்பார்த்த அளவு மாநிலத்தில் கொள்முதல் நடைபெறவில்லை. செப்டம்பர் மாத இறுதியில் 69,841 மெட்ரிக் டன்கள் புழுங்கல் அரிசியும், 41.309 மெட்ரிக் டன்கள் பச்சரிசியும் 52.000 டன்கள் அரிசிக்கு இணையான நெல்லும் கையிருப்பிலிருந்தது. சுமார் 60.000 டன்கள் புழுங்கல் அரிசி சந்தனை திட்டத்திற்கு விநியோகிக்கப்பட்ட பின் சுமார் 10.000 டன்கள் புழுங்கல் அரிசியும் 52,000 டன்கள் அரிசிக்கு இணையான நெல் புழுங்கல் அரிசியாக மாற்றப்பட்டு

பொது விநியோகத்திற்கென விடுவிக்கப்பட்டது. மாதம் ஒன்றுக்கு பொதுவிநியோகத்திற்கு 1,20,000 டன்கள் அரிசியும் சத்துணவு திட்டத்திற்கு சுமார் 20,000 டன்கள் அரிசியும் தேவைப்பட்டன. பொதுவிநியோகத்தில் மாதம் ஒன்றுக்கு 30,000 டன்கள் புழுங்கல் அரிசி மட்டுமே விநியோகிக்க முடிந்தது. பொதுவிநியோகத்திற்கு அரிசி போதுமான அளவில் கையிருப்பில் இல்லாத நிலையில் மத்திய தொகுப்பிலிருந்து அக்டோபர் மாதம் 65,000 டன்கள் அரிசியும், நவம்பரில் 80,000 டன்கள் அரிசியும், டிசம்பரில் 80,000 டன்கள் அரிசியும் 1989 ஜனவரியில் 1,05,000 டன்கள் அரிசியும் பெறப்பட்டது. இவை முழுவதும் பச்சரிசியாகவே கொடுக்கப்பட்டது. மேலும், வெளிச் சந்தையில் வாங்கிய 1,78,175 டன்களும் பச்சரிசியாகவே பெறப்பட்டது. மிகவும் நெருக்கடியான காலக்கட்டங்களில் பொதுமக்களுக்கு அரிசி விநியோகிக்க வேண்டும் என்ற காரணத்தால் கையிருப்பில் உள்ள அரிசி எல்லா மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. சுமார் 25 விழுக்காடே புழுங்கல் அரிசியாக கொடுக்க வேண்டிய நிலையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மக்கள் புழுங்கல் அரிசியையே அதிகமாக விரும்பிய காரணத்தால் கீழ்க்கண்ட வாறு அரிசி விநியோகிக்கப்பட்டது :—

	புழுங்கல் அரிசி	பச்சரிசி
அக்டோபர் 1988	1,355 டன்கள்	2,338 டன்கள்
நவம்பர் 1988	1,846 டன்கள்	3,047 டன்கள்
டிசம்பர் 1988	2,023 டன்கள்	3,292 டன்கள்
ஜனவரி 1989	2,017 டன்கள்	3,809 டன்கள்

தற்பொழுது சம்பா பருவத்தில் மாநிலத்திலேயே நெல் கொள்முதல் செய்யப்படுவதாலும், மத்திய தொகுப்பிலிருந்து 40,000 டன்களே அரிசி ஒதுக்கீடு செய்யப்படுவதாலும் இனிவரும் காலத்தில் அதிக புழுங்கல் அரிசியும், குறைவான பச்சரிசியும் கொடுக்க இயலும். தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் 1,200 டன்கள் புழுங்கல் அரிசியும், 8,500 டன்கள் பச்சரிசியும் உள்ளது. இம்மாவட்டத்தின் மாத அரிசி தேவை 5,440 டன்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த ஆண்டு குடும்ப அட்டைகள் புதுப்பித்தலுக்கு முன்பு வழங்கப்பட்ட அட்டைகளின் எண்ணிக்கை 3,14,954 ஆகும். அதன் பிறகு விநியோகம்

1989 பிப்ரவரி 17] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

செய்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 3,42,502 ஆகும், அதாவது சுமார் 9 விழுக்காடு கூடுதல் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியாளர் குறிப்பிட்ட தாலுகாக்களில் குடும்ப அட்டைகள் வழங்கப் படாமல் இருந்தால், ஆராய்ந்து ஆய்வு நடத்தி புது அட்டைகள் வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

சென்னை பூங்கா நகர் தொகுதி சென்னை ஜார்ஜ் டவன் உணவு வழங்கல் மண்டலத்தில் உள்ளது. இம்மண்டலத்தில் கடந்த ஆண்டு குடும்ப அட்டைகள் புதுப்பித்தலுக்கு முன்பு வழங்கப்பட்ட அட்டைகளின் எண்ணிக்கை 55,031 ஆகும். அதன் பிறகு விநியோகம் செய்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை 58,308 ஆகும். அதாவது சுமார் 6 விழுக்காடு கூடுதல் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. புதிய குடும்ப அட்டைகள் கேட்டு பெறப் பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. புதிய குடும்ப அட்டைகள் கேட்டு விண்ணப்பங்கள் ஏதேனும் பெறப் பட்டால் அவற்றைப் பரிசீலித்து பின் புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தொடர்புடைய உறுப் பினர்கள் மூவரும் ஆளுக்கு ஒரு வினா மட்டும் எழுப்பலாம்.

திரு. அ. இரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பூங்கா நகர் தொகுதியில் ரேஷன் கார்டுகள் கேட்டு, ஏற்கனவே மனுக்கள் பல கொடுத்திருந்தும் கூட இன்னும் அவைகள் பரிசீலனை செய்யப்படாத நிலையில் இருக்கின்றன. ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகின்ற விதத்திலே, பூங்கா நகர் தொகுதியில் இருக்கும் மக்களுடைய மனுக்களைப் பரிசீலனை செய்து உடனடியாக ரேஷன் கார்டுகளை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் இரகுமான்கான் அவர்களுடைய தொகுதியில் ஏற்கனவே வழங்கப்பட்ட ரேஷன் கார்டுகளைவிட இப்பொழுது கூடுதலாக 6 சதவிகிதம் அட்டைகள் வழங்கப்பட் டிருக்கின்றன. யாருக்காவது ரேஷன் கார்டு கிடைக்கவில்லை என்ற புகாரோ அல்லது விண்ணப்பமோ உரிய இலாக்காவிற்கு அனுப்பி வைக்கப்பட்டால் இலாக்கா அதைப்பற்றி பரிசீலிக்கும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் தொடர்புடையவர்கள் மட்டும் தான் பேசலாம் என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது தொடர்பாக, தொடர்புடைய உறுப்பினர்கள் மற்றொரு வினா கேட்கலாம்.

திரு. செ. நூர்முகமது : தலைவர் அவர்களே, கல்குளம், விளவங்கோடு வட்டங்களில் ஏற்கனவே ரேஷன் கார்டுகள் வழங்கப்படாமல் நிலுவையில் இருக்கின்ற மனுக்கள் மீது ஒரு குறிப்பிட்ட காலவரம்பு குறிப்பிட்டு நடவடிக்கை எடுக்குமாறு அரசு உத்தரவிடுமா என்று வினவ விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, அந்தத் தொகுதிகளில் இப்போது புதிதாக 9 சதவிகிதம் அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மேலும் அட்டைகள் தேவைப்படுகின்றவர்கள் இலாக்காவிற்கு விண்ணப்பித்தால் இலாக்கா பரிசீலிக்கும். ஆனால், அதே நேரத்தில் அரசிற்கு இருக்கின்ற சங்கடம் என்னவென்றால், நாட்டிலே ஏறக்குறைய 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலி ரேஷன் கார்டுகள் இதுவரையிலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே கார்டு வைத்திருக்கின்றவர்கள் மறுபடியும் விண்ணப்பித்து அதனாலே ஒரு குழப்பம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது தொடர்பாக வேறு யாரும் வினா எழுப்பமுடியாது என்பது அவை மரபு என்பதை அருள்கூர்ந்து உணர வேண்டும். (குறுக்கீடு). இதில் எந்த ஒழுங்குப் பிரச்சினையும் வராது.

1. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(இ) பிரதமரின் சென்னை வருகையின்போது இடிக்கப்பட்ட குடிசைகள் விவரம்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் 14 ஆம் தேதி நடந்த ஒரு விவாதத்தின் போது எங்களுடைய கட்சியினுடைய மாண்புமிகு